..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................

10. பதவிக்கு பொருத்தமாகப் பெற்றுக்கொண்டுள்ள அனுபவம் :
..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................

11. விளையாட்டு மற்றும் வெளிவாரித் தகைமைகள் :
..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................

12. நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றத்துக்காக நீதிமன்றம் ஒன்றில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? (உரிய கூண்டில் "✓"அடையாளத்தை இடவும்) (ஆம் எனின் விபரங்களைக் குறிப்பிடவும்)

ஆம் ☐ இல்லை ☐

13. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இந்த விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானவை எனவும் மற்றும் சரியானவை எனவும் கௌரவமாக தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் ஏதேனும் ஒரு பகுதி பூரணப்படுத்தப்படாமல் மற்றும்/அல்லது தவறுதலாக பூர்த்தி செய்வதனால் ஏற்படக்கூடிய இழப்பை ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன்.

(ஆ) என்னால் மேற்கொள்ளப்படுகின்ற இந்தப் பிரகடனம் பொய்யானது என நிரூபிக்கக்கப்பட்டால், நியமனம் வழங்கப்படுவதற்கு முன்னர் பதவிக்கு பொருத்தமற்றவராக இருப்பேன் என்பதோடு நியமனம் வழங்கப்பட்ட பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என நான் அறிவேன்.

(இ) இதில் குறிப்பிடப்பட்ட எத்தகைய தகவல்களையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

.......................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ........................

6-542

---

## இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் ஊழல் தடுப்பு உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்தல் - 2018

## Recruitment to Posts of Corruption Prevention Officers of the Commission to Investigate Allegations of Bribery or Corruption - 2018

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் ஊழல் தடுப்பு உத்தியோகத்தர் பதவிகளில் நிலவும் 50 (ஐம்பது)வெற்றிடங்களுக்கு தகைமையுள்ளவர்களை தெரிவு செய்வதற்கு நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தினால் 2018 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் கொழும்பில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இந்தப் பதவி தொடர்பில் ஆர்வமுள்ளவர்கள் இந்த அறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2018.07.11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, இல. 36, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07" எனும் முகவரிக்கு

பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''ஊழல் தடுப்பு உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்பு'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **2018.07.11** ஆகும்.

**குறிப்பு**:- விண்ணப்பமொன்று அல்லது அது தொடர்பான கடிதமொன்று தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பாக பரிசீலிக்கப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பத்தை தாமதப்படுத்துவதனால் ஏற்படும் நட்டத்தை விண்ணப்பதாரியே பொறுப்பேற்றல் வேண்டும்.

01. **சேவைக்கு ஆட்சேர்க்கும் முறை**.- தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் பின்னர் நிலவும் வெற்றிடங்களுக்கு அமைய, பெற்றுக்கொள்ளப்படும் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கு முறைக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும். நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 50 ஆகும்.

1.1 விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற விரும்பும் ஊடக மொழியை விண்ணப்பத்தில் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். நேர்முகப் பரீட்சை அந்த மொழியில் நடைபெறும்.

02. **பதவியில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

- இப்பதவி நிரந்தமானது, ஓய்வூதிய உரித்துடையது. மேலும், விதவைகள், அநாதைகள் / தபுதாரர் அநாதைகள் நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். (ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு கட்டுப்படுதல் வேண்டும்.)

- இந்தப் பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர். அந்த மூன்று (03) வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

- அவ்வாறே தரம் II க்கு பதவி உயர்வு பெற்று 03 வருடங்களுக்குள் இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலும் தரம் I க்கு பதவி உயர்வு பெற்று 05 வருடங்களுக்குள் மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

- பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 7/2007, 01/2014 மற்றும் அவற்றுக்கு இடைத்தேர்வான சுற்றறிக்கைகளுக்கு அமைய, ஐந்து (05) வருடத்திற்குள் மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

- அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், நிதி ஒழுங்கு விதிகளுக்கும், ஆணைக்குழுவின் ஏனைய கட்டளைகளுக்கும் அரசாங்கத்தினால் அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றுநிருப அறிவுத்துரைகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டிருக்கும்.

03. **சம்பள அளவுத்திட்டம்** :-

இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம்: ரூபா 31,490 -10 x 445 -11x 660 -10x730 -5x750 - ரூபா 54,250 (சம்பள குறியீட்டு இலக்கம் - MN4 - 2016) இந்த சம்பள அளவுத்திட்டம் 2020.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். 2018.01.01 ஆந் திகதிக்கு அடிப்படைச் சம்பளம் ரூபா 24,980 மற்றும் ரூபா 3,278 ஒப்பீட்டுக் கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

04. **தேவையான தகைமைகள்**:-

***கல்வித் தகைமைகள்:***

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

- வயதெல்லை : 2018.07.11 ஆந் திகதிக்கு 21 வயதுக்கு குறையாத 35 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

(அதற்கமைய 1997.07.11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1983.07.11 ஆந் திகதி அல்லது அதற்கு பின்னர் பிறந்த திகதி உள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பிப்பதற்கு தகைமைப் பெறுகின்றனர்.)

***உடற் தகைமைகள்:***

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கு மற்றும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதியளவு உடல் மற்றும் உள ரீதியான தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**ஏனைய தகைமைகள்:-**

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி அல்லது குடும்ப உறுப்பினரொருவர் இலங்கை சட்டத்தின் கீழ் எந்தவொரு குற்றவியல் குற்றத்திற்கும் குற்றவாளியாக்கப்பட்டிருத்தல் கூடாது.
- சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான தேவையான சகல தகைமைகளும் விண்ணப்பங்கள் கோரப்படும் வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு எல்லா விதத்திலும் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- இந்தப் பதவிக்கு தகைமைப் பெறுபவர்களுக்கு நியமனங்கள் வழங்குவதற்கு முன்னர் ஆணைக்குழுவின் சேவைக்கு பொருத்தமானவரா என்பதை தேடிப்பார்ப்பதற்கு பாதுகாப்பு தடைநீக்க அறிக்கை கோரப்படும்.

05. **ஆட்சேர்ப்பு முறை:-**

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்க்கப்படுவர்.

தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | உச்சப் புள்ளிகள் 100 | தெரிவு செய்யப்படுவதற்கு பரிசீலிக்கப்படும் ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| **மொழித்தேர்ச்சி**<br>• தாய் மொழிக்கு மேலதிகமாக கற்றுக்கொண்டுள்ள வேறு மொழி தொடர்பான பட்டப்பின் படிப்பு பட்டம் - 20 புள்ளிகள்<br>• தாய் மொழிக்கு மேலதிகமாக கற்றுக்கொண்டுள்ள வேறு மொழி தொடர்பான பட்டம் - 15 புள்ளிகள்<br>• பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட அரச நிறுவனமொன்றில் தாய்மொழி தவிர்ந்த வேற்று மொழி தொடர்பான டிப்ளோமா பாடநெறிக்கு — 10 புள்ளிகள்<br>• பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட அரச நிறுவனமொன்றில் தாய்மொழி தவிர்ந்த வேற்று மொழி தொடர்பான சான்றிதழ் பாடநெறிக்கு — 05 புள்ளிகள்<br>(தகைமை பெறுவதற்கான பட்டத்திற்கு மேலதிகமாக பெற்றுக் கொள்ளப்பட்ட தகைமைகளாக இருத்தல் வேண்டும்) | 20 | ஏற்புடையதன்று |
| **கணினி அறிவு**<br>• பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப் பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டத்தில் பிரதான பாடமாக தகவல் தொழில்நுட்பத்தை கற்றிருத்தல் - 15 புள்ளிகள்<br>• அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் 06 மாதங்களுக்கு குறையாத தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறியொன்றை கற்றிருத்தல் - 10 புள்ளிகள்<br>• அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் 03 மாதங்களுக்கு குறையாத தகவல் தொழில்நுட்ப சான்றிதழ் பாடநெறியொன்றை கற்றிருத்தல் - 05 புள்ளிகள்<br>(தகைமை பெறுவதற்கான பட்டத்திற்கு மேலதிகமாக பெற்றுக்கொள்ளப்பட்ட தகைமைகளாக இருத்தல் வேண்டும்) | 15 | |

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள்* | *உச்சப் புள்ளிகள் 100* | *தெரிவு செய்யப்படுவதற்கு பரிசீலிக்கப்படும் ஆகக் குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|
| **மேலதிக கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள்**<br>• பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள் ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டப் பின்படிப்பு பட்டம் - 20 புள்ளிகள்<br>• பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டப் பின்படிப்பு டிப்ளோமா - 10 புள்ளிகள்<br>• அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத பாடநெறிக் காலத்தைக் கொண்ட சான்றிதழ் பாடநெறி – 05 புள்ளிகள்<br><br>(தகைமை பெறுவதற்கான பட்டத்திற்கு மேலதிகமாக பெற்றுக்கொள்ளப்பட்ட தகைமைகளாக இருத்தல் வேண்டும்) | 20 | |
| **ஆய்வுக் கட்டுரை மற்றும் விடய பகுப்பாய்வு தொடர்பான அனுபவம்**<br>பதவிக்கு தகைமை பெறுவதற்கான பட்டத்திற்கு அல்லாத வேறு தேவைப்பாட்டுக்காக செய்யப்பட்ட ஆய்வுக்கட்டுரை அல்லது விடய பகுப்பாய்வு அறிக்கை ஒன்றுக்கு 10 புள்ளிகள் வீதம் (உச்ச புள்ளிகள் 20) | 20 | |
| **விடயப்பரப்புக்கு வெளியிலான செயற்பாடுகள்**<br>தேசிய மட்டத்தில் விளையாட்டு மற்றும் ஏனைய திறன்களுக்கு – 20 புள்ளிகள்<br>மாகாண மட்டத்தில் விளையாட்டு மற்றும் ஏனைய திறன்களுக்கு – 10 புள்ளிகள்<br>மாவட்ட மட்டத்தில் விளையாட்டு மற்றும் ஏனைய திறன்களுக்கு – 05 புள்ளிகள் | 20 | |
| **நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை**<br>விண்ணப்பதாரியின் நடத்தை மற்றும் தொடர்பாடல் திறன் பற்றி பரிசீலிக்கப்பட்டு நேர்முகப் பரீட்சை சபையின் தற்துணிவின் பேரில் புள்ளிகள் வழங்கப்படும். | 05 | |

06. விண்ணப்பப்படிவத்தை செ.மீ. 22-29 அமைய ஏ4 அளவிலான காகிதத்தில் 01 தொடக்கம் 07 வரையிலான தகவல்களை முதல் பக்கத்தில் அமையுமாறு விண்ணப்பத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பத்தின் அந்தந்த தலைப்புக்களை தெளிவாக தனது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும்.உரிய மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத, பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்திய விண்ணப்பத்தின் ஒரு பிரதியை தம்வசம் வைத்திருக்க நடவடிக்கை எடுக்கவும். அத்தோடு பூரணப்படுத்திய விண்ணப்பம் பரீட்சை அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவானதா என்பதை விண்ணப்பதாரி சரிபார்த்துக்கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாத சந்தர்ப்பத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை கருத்திற்கொள்க.

6.1 ***பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :-***

பரீட்சார்த்தியின் அடையாளத்தை உறுதிப்படுத்த பின்வரும் ஆவணங்களில் ஒன்றை நேர்முகப் பரீட்சை சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்:-

I. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை;

II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

பரீட்சார்த்தி நேர்முகப் பரீட்சை சபையினால் அல்லது வினவப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்:-

I. கல்விச் சான்றிதழ்கள் ;

II. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்;

III. தேசிய ஆளடையாள அட்டை;

IV. அனுபவம் பற்றிய சான்றிதழ் ;

V. நடத்தை பற்றிய இரண்டு சான்றிதழ்கள் (அதில் ஒன்று பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்டு கிராம அலுவலரிடமிருந்து பெறப்படுதல் வேண்டும்)

**கவனத்திற்கொள்க :**

- ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கும் சந்தர்ப்பங்களில் ஏற்புடைய ஆவணங்களை சமர்ப்பிக்க தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படமாட்டாது.

07. விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஏதேனும் நிறுவனமொன்றிலிருந்து பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரி ஒருவர் தனது விண்ணப்பத்தை பணியாற்றும் திணைக்களத் தலைவர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் உத்தியோகத்தரொருவர் ஊடாக அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அல்லாத விண்ணப்பதாரிகள் தனது கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், பிரிவின் கிராம உத்தியோகத்தர்,சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்திபெற்ற நொத்தாரிசு,முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் ரூபா 4,15,260/- அல்லது அதற்கு கூடிய வருடாந்த சம்பளத்தைப் பெறுகின்ற அரசாங்க நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் மூலம் அல்லது பௌத்த விகாரை தலைமைப் பிக்கு அல்லது பிற மதத் தளங்களுக்குப் பொறுப்பான மதத் தலைவர்கள் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

08. தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது விண்ணப்பதாரி இந்தப் பதவிக்கு தகைமை பெற்றுள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளதாக கருதப்படமாட்டாது.

09. அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகள், அவ்வப்போது அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்படும் சுற்றுநிருபங்கள், சேவைப் பிரமாணக் குறிப்புகள் மற்றும் அவற்றுக்கு செய்யப்பட்டுள்ள திருத்தங்கள் என்பன இப்பதவிக்கு ஏற்புடையதாகும்.

10. வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது ஒரு பகுதியை நிரப்புதல் பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் பதப்பிரயோகங்களுக்கு மத்தியில் முரண்பாடு எழுமிடத்து சிங்கள மொழி அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

(சனாதிபதி சட்டத்தரணி) சரத் ஜயமான்ன,
பணிப்பாளர் நாயகம்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு,
இல.36, மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07.
2018, மே 31.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை**
**புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் ஊழல் தடுப்பு உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2018**

**Recruitment to Posts of Legal Assistant of the Commission to Investigate Allegations of Bribery or Corruption - 2018**

நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் ஊடக மொழி
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

01. முதலெழுத்துக்கள் இறுதியில் அமையுமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்):........................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
(உதா:- NIMAL A.B.C.D. )

02. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் (ஆங்கிலத்தில்) :..............................................................................
..........................................................................................................................................................

03. முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : .............................................................................................................
..........................................................................................................................................................

04. (i) நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : (அழைப்புக் கடிதம் இந்த முகவரிக்கு அஞ்சல் செய்யப்படும்)
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

(ii) உத்தியோகபூர்வ முகவரி (அரசாங்க சேவையில் இருப்பவரெனின்) :.....................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

05. தேசிய ஆளடையாள அட்டை இல : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

06. பால்நிலை : ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

07. இனம் : ( சிங்களவர் 1, - தமிழர் 2, - இந்தியத் தமிழர் 3, - முஸ்லிம் 4, - வேறு 5) ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

08. பிறந்த திகதி :
வருடம்: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

2018.07.11 ஆந் திகதிக்கு வயது:

வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள் : ☐☐

09. தொலைபேசி இல. : கையடக்க ☐☐☐☐☐☐☐☐☐☐

நிலையான ☐☐☐☐☐☐☐☐☐☐

10. கல்வித் தகைமைகள் :

க.பொ.த. (சா.தரம்)

| பாடம் | தரம் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |

| பாடம் | தரம் |
|---|---|
| 6 | |
| 7 | |
| 8 | |
| 9 | |
| 10 | |

க.பொ.த. (உயர். தரம்)

| பாடம் | தரம் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |

11. பட்டம் பெற்ற பாடநெறி : ____________________.
பல்கலைக்கழகம் : ____________________.
பட்டம் தொடர்பான தகவல்கள் : __________.

வேறு தகைமைகள் :
1. ____________________.
2. ____________________.
3. ____________________.

12. அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்ட அல்லது பதவி விலகிய ஒருவரா என்பது பற்றி : ஆம் / இல்லை

13. ஏதேனும் குற்றத்திற்கு நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டவரா? : ..........................................................................................

பதில் ஆம் எனில் விபரங்களைத் தருக : ..........................................................................................

..........................................................................................................................................

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானதும் உண்மையானதுமென உறுதிப்படுத்துகின்றேன். என்னால் இங்கு வழங்கப்பட்டுள்ள இவ் உறுதியுரை பொய்யானதென நிரூபிக்கப்பட்டால் நியமிக்கப்படுவதற்கு முன் தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமிக்கப்பட்டதன் பின் எந்தவித நஷ்டஈடும் இன்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

..................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : -..........................

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:-**

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி.......................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் 2018 ...... மாதம் ........ ஆந் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

..................................................................
கையொப்பம்.

பெயர் மற்றும் பதவிப் பெயர் .............................
முகவரி :........................
பதவி முத்திரை :........................
திகதி : ..........................

**குறிப்பு** – தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தமது கையொப்பத்தை ஏற்புடைய திணைக்களத் தலைவர் மூலம் அல்லது அவருக்கு பதிலாக அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி அரசாங்க உத்தியோகத்தர் எனின்:-

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**: -

திரு./திருமதி/ செல்வி .................................. தற்போது இந்த திணைக்களத்தில் கடமை புரிகின்றார் என்றும் அவர் இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து இந்த திணைக்களத்தில் வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

..........................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் : .........................
பதவி : .......................
திணைக்களம் : ..........................
திகதி : ..........................

6-625

---

## இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் சட்ட உதவியாளர் பதவிக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல் - 2018

## Recruitment to Posts of Legal Assistant of the Commission to Investigate Allegations of Bribery or Corruption - 2018

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் சட்ட உதவியாளர் பதவிகளில் நிலவும் 17 (பதினேழு)வெற்றிடங்களுக்கு தகைமையுள்ளவர்களை தெரிவு செய்வதற்கு நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தினால் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் கொழும்பில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இந்தப் பதவி தொடர்பாக ஆர்வமுள்ளவர்கள் இந்த அறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2018.07.11ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, இல. 36, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சட்ட உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **2018.07.11** ஆகும்.

**குறிப்பு**:- விண்ணப்பமொன்று அல்லது அது தொடர்பான கடிதமொன்று தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பாக பரிசீலிக்கப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பத்தை தாமதப்படுத்துவதனால் ஏற்படும் நட்டத்தை விண்ணப்பதாரியே பொறுப்பேற்றல் வேண்டும்.

01. **சேவைக்கு ஆட்சேர்க்கும் முறை**.- தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் பின்னர் நிலவும் வெற்றிடங்களுக்கு ஏற்ப, பெற்றுக்கொள்ளப்படும் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கு முறைக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும். நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 17 ஆகும்.

1.1 விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற விரும்பும் ஊடக மொழியை விண்ணப்பத்தில் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். நேர்முகப் பரீட்சை அந்த மொழியில் நடைபெறும்.

02. **பதவியில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்** :

○ இப்பதவி நிரந்தமானது. ஓய்வூதிய உரித்துடையது. மேலும், விதவைகள் அனாதைகள் / தபுதாரர் அனாதைகள் நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். (ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு கட்டுப்படுதல் வேண்டும்.)

- இந்தப் பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று (03) வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுவர். அந்த மூன்று (03) வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

- அவ்வாறே தரம் II க்கு பதவி உயர்வு பெற்று 03 வருடங்களுக்குள் இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலும், தரம் I க்கு பதவி உயர்வு பெற்று 05 வருடங்களுக்குள் மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

- பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 7/2007,01/2014 மற்றும் அவற்றுக்கு இடைதேர்வான சுற்றறிக்கைகளுக்கு அமைய, ஐந்து (05) வருடத்திற்குள் மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

- அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், நிதி ஒழுங்கு விதிகளுக்கும், ஆணைக்குழுவின் ஏனைய கட்டளைகளுக்கும் அரசாங்கத்தினால் அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றுநிருப அறிவுத்துரைகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டிருக்கும்.

**03. சம்பள அளவுத்திட்டம் :-**

இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம்: ரூ.31,490 -10x445 -11x660 -10x730 -5x750 -ரூ.54,250/- (சம்பள குறியீட்டு இலக்கம் - MN4 - 2016)இந்த சம்பள அளவுத்திட்டம் 2020.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். 2018.01.01 ஆந் திகதிக்கு அடிப்படைச் சம்பளம் ரூ.24,980/- மற்றும் ரூ.3,278/- ஒப்பீட்டுக் கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

**04. தேவையான தகைமைகள்:-**

***கல்வித் தகைமைகள்:-***

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சட்டம் தொடர்பான பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

- வயதெல்லை : 2018.07.11 ஆந் திகதிக்கு 21 வயதுக்கு குறையாத 35 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (அதற்கமைய 1997.07.11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1983.07.11 ஆந் திகதி அல்லது அதற்கு பின்னர் பிறந்த திகதி உள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பிப்பதற்கு தகைமை பெறுகின்றனர்)

***உடற் தகைமைகள் :***

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கு மற்றும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதியளவு உடல் மற்றும் உள ரீதியான தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

***ஏனைய தகைமைகள்:***

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

- விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்;

- விண்ணப்பதாரி அல்லது குடும்ப உறுப்பினரொருவர் இலங்கைச் சட்டத்தின் கீழ் எந்தவொரு குற்றவியல் குற்றத்திற்கும் குற்றவாளியாக்கப்பட்டிருத்தல் கூடாது;

- சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான தேவையான சகல தகைமைகளும் விண்ணப்பங்கள் கோரப்படும் வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு எல்லா விதத்திலும் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்;

- இந்தப் பதவிக்கு தகைமை பெறுபவர்களுக்கு நியமனங்கள் வழங்குவதற்கு முன்னர் ஆணைக்குழுவின் சேவைக்கு பொருத்தமானவரா என்பதை தேடிப்பார்ப்பதற்கு பாதுகாப்பு தடைநீக்க அறிக்கை கோரப்படும்.

**05. ஆட்சேர்ப்பு முறை:**

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்க்கப்படுவர்.

தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | உச்சப் புள்ளிகள் 100 | தெரிவு செய்யப்படுவதற்கு பரிசீலிக்கப்படும் ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| **மொழித்தேர்ச்சி**<br>• தாய் மொழிக்கு மேலதிகமாக கற்றுக்கொண்டுள்ள வேறு மொழி தொடர்பான பட்டப்பின் படிப்பு பட்டம் - 20 புள்ளிகள்<br>• தாய் மொழிக்கு மேலதிகமாக கற்றுக்கொண்டுள்ள வேறு மொழி தொடர்பான பட்டம் - 15 புள்ளிகள்<br>• பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட அரச நிறுவனமொன்றில் தாய்மொழி தவிர்ந்த வேற்று மொழி தொடர்பான டிப்ளோமா பாடநெறிக்கு – 10 புள்ளிகள்<br>• பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட அரச நிறுவனமொன்றில் தாய்மொழி தவிர்ந்த வேற்று மொழி தொடர்பான சான்றிதழ் பாடநெறிக்கு – 05 புள்ளிகள்<br>(தகைமை பெறுவதற்கான பட்டத்திற்கு மேலதிகமாக பெற்றுக்கொள்ளப்பட்ட தகைமைகளாக இருத்தல் வேண்டும்) | 20 | ஏற்புடையதன்று |
| **கணினி அறிவு**<br>• பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டத்தில் பிரதான பாடமாக தகவல் தொழில்நுட்பத்தை கற்றிருத்தல் - 15 புள்ளிகள்<br>• அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் 06 மாதங்களுக்கு குறையாத தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறியொன்றை கற்றிருத்தல் - 10 புள்ளிகள்<br>• அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் 03 மாதங்களுக்கு குறையாத தகவல் தொழில்நுட்ப சான்றிதழ் பாடநெறியொன்றை கற்றிருத்தல் - 05 புள்ளிகள்<br>(தகைமை பெறுவதற்கான பட்டத்திற்கு மேலதிகமாக பெற்றுக்கொள்ளப்பட்ட தகைமைகளாக இருத்தல் வேண்டும்) | 15 | |
| **மேலதிக கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள்**<br>• பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டப் பின்படிப்பு பட்டம் - 20 புள்ளிகள்<br>• பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள் ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டப் பின்படிப்பு டிப்ளோமா - 10 புள்ளிகள்<br>• அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத பாடநெறிக் காலத்தைக் கொண்ட சான்றிதழ் பாடநெறி – 05 புள்ளிகள்<br>(தகைமை பெறுவதற்கான பட்டத்திற்கு மேலதிகமாக பெற்றுக்கொள்ளப்பட்ட தகைமைகளாக இருத்தல் வேண்டும்) | 20 | |

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள்* | *உச்சப் புள்ளிகள் 100* | *தெரிவு செய்யப்படுவதற்கு பரிசீலிக்கப்படும் ஆகக் குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|
| **ஆய்வுக் கட்டுரை மற்றும் விடய பகுப்பாய்வு தொடர்பான அனுபவம்.**<br>*பதவிக்கு தகைமை பெறுவதற்கான பட்டத்திற்கு அல்லாத வேறு தேவைப்பாட்டுக்காக செய்யப்பட்ட ஆய்வுக்கட்டுரை அல்லது விடய பகுப்பாய்வு அறிக்கை ஒன்றுக்கு 10 புள்ளிகள் வீதம் (உச்ச புள்ளிகள் 20)* | 20 | |
| **விடயப்பரப்புக்கு வெளியிலான செயற்பாடுகள்**<br>*தேசிய மட்டத்தில் விளையாட்டு மற்றும் ஏனைய திறன்களுக்கு – 20 புள்ளிகள்*<br>*மாகாண மட்டத்தில் விளையாட்டு மற்றும் ஏனைய திறன்களுக்கு – 10 புள்ளிகள்*<br>*மாவட்ட மட்டத்தில் விளையாட்டு மற்றும் ஏனைய திறன்களுக்கு – 05 புள்ளிகள்* | 20 | |
| **நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை**<br>*விண்ணப்பதாரியின் நடத்தை மற்றும் தொடர்பாடல் திறன் பற்றி பரிசீலிக்கப்பட்டு நேர்முகப் பரீட்சை சபையின் தற்துணிவின் பேரில் புள்ளிகள் வழங்கப்படும்.* | 05 | |

*06. விண்ணப்பப்படிவத்தை செ.மீ. 22-29 அமைய ஏ4 அளவிலான காகிதத்தில் 01 தொடக்கம் 07 வரையிலான தகவல்களை முதல் பக்கத்தில் அமையுமாறு விண்ணப்பத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பத்தின் அந்தந்த தலைப்புக்களை தெளிவாக தனது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும்.உரிய மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத, பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்திய விண்ணப்பத்தின் ஒரு பிரதியை தம்வசம் வைத்திருக்க நடவடிக்கை எடுக்கவும். அத்தோடு பூரணப்படுத்திய விண்ணப்பம் பரீட்சை அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவானதா என்பதை விண்ணப்பதாரி சரிபார்த்துக்கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாத சந்தர்ப்பத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை கருத்திற்கொள்க.*

*6.1 **பரீட்சார்த்தியின் அடையாளம்:-***
*பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த பின்வரும் ஆவணங்களில் ஒன்றை நேர்முகப் பரீட்சை சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்:-*

I. *ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை;*
II. *செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.*

*பரீட்சார்த்தி நேர்முகப் பரீட்சை சபையினால் அல்லது வினவப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்:-*

I. *கல்விச் சான்றிதழ்கள் ;*
II. *பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்;*
III. *தேசிய ஆளடையாள அட்டை;*
IV. *அனுபவம் பற்றிய சான்றிதழ் ;*
V. *நடத்தை பற்றிய இரண்டு சான்றிதழ்கள் (அதில் ஒன்று பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்டு கிராம அலுவரிடமிருந்து பெறப்படுதல் வேண்டும்).*

**கவனத்திற்கொள்க :**

- *ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கும் சந்தர்ப்பங்களில் ஏற்புடைய ஆவணங்களை சமர்ப்பிக்க தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படமாட்டாது.*

07. விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஏதேனும் நிறுவனமொன்றிலிருந்து பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரி ஒருவர் தனது விண்ணப்பத்தை பணியாற்றும் திணைக்களத் தலைவர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் உத்தியோகத்தரொருவர் ஊடாக அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அல்லாத விண்ணப்பதாரிகள் தனது கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், பிரிவின் கிராம உத்தியோகத்தர்,சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர்,பிரசித்திபெற்ற நொத்தாரிசு,முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் ரூபா 415,260/- அல்லது அதற்கு கூடிய வருடாந்த சம்பளத்தைப் பெறுகின்ற அரசாங்க நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் மூலம் அல்லது பௌத்த விகாரை தலைமைப் பிக்கு அல்லது பிற மதத் தளங்களுக்குப் பொறுப்பான மதத் தலைவர்கள் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

08. தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது விண்ணப்பதாரி இந்தப் பதவிக்கு தகைமைப் பெற்றுள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளதாக கருதப்படமாட்டாது.

09. அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகள், அவ்வப்போது அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்படும் சுற்றுநிருபங்கள், சேவைப் பிரமாணக் குறிப்புகள் மற்றும் அவற்றுக்கு செய்யப்பட்டுள்ள திருத்தங்கள் என்பன இப்பதவிக்கு ஏற்புடையதாகும்.

10. வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது ஒரு பகுதியை நிரப்புதல் பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் பதப்பிரயோகங்களுக்கு மத்தியில் முரண்பாடு எழுமிடத்து சிங்கள மொழி அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

(சனாதிபதி சட்டத்தரணி) சரத் ஜயமான்ன,
பணிப்பாளர் நாயகம்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு,
இல.36, மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07.
2018, மே 31.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை**
**புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் சட்ட உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2018**

**Recruitment to Posts of Legal Assistant of the Commission to Investigate Allegations of Bribery or Corruption - 2018**

நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் ஊடக மொழி சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைப் பெட்டியில் இடுக.)

01. முதலெழுத்துக்கள் இறுதியில் அமையுமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்):
.............................................................................................................................................
.............................................................................................................................................
(உதா:- NIMAL A.B.C.D.)

02. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் (ஆங்கிலத்தில்): ...........................................................................
.............................................................................................................................................

03. முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ...........................................................................................................
.............................................................................................................................................

04. (i) நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : (அழைப்புக் கடிதம் இந்த முகவரிக்கு அஞ்சல் செய்யப்படும்)
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................

(ii) உத்தியோகபூர்வ முகவரி (அரசாங்க சேவையில் இருப்பவரெனின்) : .....................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................

05. தேசிய ஆளடையாள அட்டை இல : | | | | | | | | | | | | |

06. பால்நிலை : ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

07. இனம் : ( சிங்களவர் 1, - தமிழர் 2, - இந்தியத் தமிழர் 3, - முஸ்லிம் 4, - வேறு 5) ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

08. பிறந்த திகதி :
வருடம்: | | | | | மாதம்: | | | திகதி: | | |

2018.07.11 ஆந் திகதிக்கு வயது:

வருடங்கள்: | | | மாதங்கள்: | | | நாட்கள் : | | |

09. தொலைபேசி இல. : கையடக்க | | | | | | | | | | |

நிலையான | | | | | | | | | | |

10. கல்வித் தகைமைகள் :

க.பொ.த. (சா.தரம்)

| பாடம் | தரம் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |

| பாடம் | தரம் |
|---|---|
| 6 | |
| 7 | |
| 8 | |
| 9 | |
| 10 | |

க.பொ.த. (உயர் தரம்)

| பாடம் | தரம் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |

11. சட்டத்துறைப் பட்டம் பெற்ற பாடநெறி : ____________________.
பல்கலைக்கழகம் : ____________________.
பட்டம் தொடர்பான தகவல்கள் : __________.

வேறு தகைமைகள் :
1. ____________________.
2. ____________________.
3. ____________________.

12. அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்ட அல்லது பதவி விலகிய ஒருவரா : ஆம் / இல்லை

13. ஏதேனும் குற்றத்திற்கு நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டவரா? ..............................................................................
பதில் ஆம் எனின், விபரங்களைத் தருக. : ..............................................................................
..............................................................................................................................

இவ்விண்ணப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானதும் உண்மையானதுமென உறுதிப்படுத்துகின்றேன். என்னால் இங்கு வழங்கப்பட்டுள்ள இவ் உறுதியுரை பொய்யானதென நிரூபிக்கப்பட்டால் நியமிக்கப்படுவதற்கு முன் தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமிக்கப்பட்டதன் பின் எந்தவித நஷ்டஈடும் இன்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

..................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : -.........................

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:-**

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி.......................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் 2018, ...... மாதம் ........ ஆந் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

.................................................................
கையொப்பம்.

பெயர் மற்றும் பதவிப் பெயர் .............................
முகவரி :.......................
பதவி முத்திரை :.......................
திகதி : .........................

**குறிப்பு** – தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தமது கையொப்பத்தை ஏற்புடைய திணைக்களத் தலைவர் மூலம் அல்லது அவருக்கு பதிலாக அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி அரசாங்க உத்தியோகத்தர் எனின்:-

**திணைக்களத் தலைவரின் உறுதியுரை : -**

திரு./திருமதி/ செல்வி .................................. தற்போது இந்த திணைக்களத்தில் கடமை புரிகின்றார் என்றும் அவர் இந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்படுமிடத்து இந்தத் திணைக்களத்தில் வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

..........................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் : .........................
பதவி : .......................
திணைக்களம் : .........................
திகதி : .........................

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் புலனாய்வு உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018

## Open Competitive Examination for Recruitment to the Post of Investigation Officer of the Commission to Investigate Allegations of Bribery or Corruption - 2018

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் புலனாய்வு உத்தியோகத்தர் பதவிகளில் நிலவும் 200 (இருநூறு) வெற்றிடங்களுக்கு தகைமையுள்ளவர்களைத் தெரிவு செய்வதற்கு நடாத்தப்படும் போட்டிப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் கொழும்பு, கண்டி, மாத்தறை, குருநாகல், கிளிநொச்சி மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் நடாத்தப்படும். அத்தோடு குறிப்பிட்ட மாவட்டமொன்றில் எதிர்பார்க்கப்படும் அளவு விண்ணப்பதாரிகள் தோற்றாதவிடத்து அல்லது வேறு காரணங்களுக்காக விண்ணப்பதாரிகள் அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.இந்த அறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2018.07.10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டு பரீட்சைப் பிரிவு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ. 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "புலனாய்வு உத்தியோகத்தர் பதவி சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மொழி மூலம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **2018.07.10** ஆகும்.

**குறிப்பு**:- விண்ணப்பமொன்று அல்லது அது தொடர்பான கடிதமொன்று தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பாக பரிசீலிக்கப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பத்தை தாமதப்படுத்துவதனால் ஏற்படும் நட்டத்தை விண்ணப்பதாரியே பொறுப்பேற்றல் வேண்டும்.

01. **சேவைக்கு ஆட்சேர்க்கும் முறை** : எழுத்துமூலப் பரீட்சை மற்றும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் பின்னர் நிலவும் வெற்றிடங்களுக்கு அமைய திறமை ஒழுங்கில் ஆட்சேர்க்கப்படுவர். நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 200 ஆகும்.

1.1 இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரி தனக்கு ஏற்புடைய ஒரு மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற முடியும். உரிய வினாப்பத்திரத்திற்கு அந்த மொழியிலேயே விடையளித்தல் வேண்டும். விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்னர் ஊடகமொழியை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

02.0 **பதவியில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்** :

- இப்பதவி நிரந்தமானது. ஓய்வூதிய உரித்துடையது. மேலும், விதவைகள் அனாதைகள் / தபுதாரர் அனாதைகள் நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். (ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு கட்டுப்படுதல் வேண்டும்.)

- இந்தப் பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர் அந்த மூன்று (03) வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

- அவ்வாறே தரம் II க்கு நியமனம் பெற்று 03 வருடங்களுக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலும், தரம் I க்கு பதவி உயர்வு பெற்று 05 வருடங்களுக்குள் இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

- பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 7/2007, 01/2014 மற்றும் அவற்றுக்கு இடைதேர்வான சுற்றறிக்கைகளுக்கு அமைய, ஐந்து (05) வருடத்திற்குள் மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

- அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், நிதி ஒழுங்கு விதிகளுக்கும், ஆணைக்குழுவின் ஏனைய கட்டளைகளுக்கும் அரசாங்கத்தினால் அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றுநிருப அறிவுத்துரைகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டிருக்கும்.

03. **சம்பள அளவுத்திட்டம்** :-

இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம்: ரூ.34,605-10x660-11x755-15x930-ரூ.63,460/- (சம்பள குறியீட்டு இலக்கம் - MN5 - 2016) இந்த சம்பள அளவுத்திட்டம் 2020.01.01 ஆந் திகதியிலிந்து நடைமுறைப்படுத்தப்படும். 2018.01.01 ஆந் திகதிக்கு அடிப்படைச் சம்பளம் ரூ.33,290/-மற்றும் ரூ.1,052/- ஒப்பீட்டுக் கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

04. **தேவையான தகைமைகள்**:-

***கல்வித் தகைமைகள்:-***

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்ட மொன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) உயர் நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்த சட்டத்தரணியாக இருத்தல்;

***வயதெல்லை*** : 2018.07.10 ஆந் திகதிக்கு 21 வயதுக்கு குறையாத 35 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்;

(அதற்கமைய 1997.07.10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1983.07.10 ஆந் திகதி அல்லது அதற்கு பின்னர் பிறந்த திகதி உள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பிப்பதற்கு தகைமைப் பெறுகின்றனர்).

***உடற் தகைமைகள்:-***

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கு மற்றும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதியளவு உடல் மற்றும் உள ரீதியான தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

***ஏனைய தகைமைகள் :-***

- இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்;
- விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும் ;
- சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான தேவையான சகல தகைமைகளும் விண்ணப்பங்கள் கோரப்படும் வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு எல்லா விதத்திலும் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்;
- இந்தப் பதவிக்கு தகைமைப் பெறுபவர்களுக்கு நியமனங்கள் வழங்குவதற்கு முன்னர் ஆணைக்குழுவின் சேவைக்கு பொருத்தமானவரா என்பதை தேடிப்பார்ப்பதற்கு பாதுகாப்பு தடைநீக்க அறிக்கை கோரப்படும்.

05. **ஆட்சேர்ப்பு முறை**:

5.1 ***எழுத்துமூலப் பரீட்சை :*** பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

| பாட எண் | பாடங்கள் | பாடத்திட்டம் | காலம் | உச்சப் புள்ளிகள் | சித்தியடைவதற்கு தேவையான ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| 01 | பொது அறிவு | விளையாட்டு, சர்வதேச அமைப்புக் கள், தகவல் தொழில்நுட்பம், வரலாறு, பரீட்சார்த்தி வசிக்கும் சூழலை உள்ளடக்கிய வகையில் இலங்கையின் அரசியல், சமூக, கலாசார மற்றும் பொருளாதார சூழல், தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த நவீன தகவல்கள், விஞ்ஞான மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பாக அவருக்குள்ள அறிவை பரீட்சிக்கும் வகையிலான பொது வினாப்பத்திரம் | 02 மணித் தியாலங்கள் | 100 | 40% |
| 02 | உளச் சார்புப் பரீட்சை | சொற்கள், எண்கோலங்கள் மற்றும் படங்கள் அமைப்பில் முன்வைக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பாக பரீட்சார்த்தியின் முடிவுகள் மற்றும் பதில்களை பரீட்சிப்பதன் ஊடாக பரீட்சார்த்தியின் கிரகிக்கும் திறன் மற்றும் அறிவாற்றல் மதிப்பிடப்படும். | 02 மணித் தியாலங்கள் | 100 | 40% |

| பாட எண் | பாடங்கள் | பாடத்திட்டம் | காலம் | உச்சப் புள்ளிகள் | சித்தியடைவதற்கு தேவையான ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| 03 | கட்டுரை மற்றும் சுருக்கம் | தரப்படும் தலைப்புக்கள் அல்லது கருப்பொருட்களிலிருந்து பரீட்சார்த்தியினால் தெரிவுசெய்யப்படும் ஒரு கருப்பொருள் தொடர்பாக கருத்து தெரிவித்தல் மற்றும் தகவல்களை முன்வைத்தல்,தொகுத்தளித்தல் மற்றும் முன்வைப்பு தொடர்பாக பரீட்சார்த்தியின் தர்க்கிக்கும் ஆற்றல் மற்றும் கற்பனைத்திறனை மதிப்பிடுதல் மற்றும் ஓரளவு சிக்கலாக ஆவணமொன்றை புரிந்துகொள்வதற்கு மற்றும் அதன் முக்கிய கருத்தை தனது சொந்த மொழிநடையில் சுருக்கமாகவும் தெளிவாகவும் சரியாகவும் வெளிப்படுத்துவதற்கு பரீட்சார்த்திக் குள்ள ஆற்றல் பரிசீலிக்கப்படும். | 02 மணித் தியாலங்கள் | 100 | 40% |

5.2 ***தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை:*** இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழு பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | உச்சப் புள்ளிகள் | சித்தியடைவதற்கு தேவையான புள்ளிகள் |
|---|---|---|
| **தொழிற் தகைமைகள்**<br>• அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவன மொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ் / டிப்ளோமா பாடநெறியொன்றை கற்றிருத்தல். (எந்தவொரு விடய பாடநெறிக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் உச்சப் புள்ளிகள் 10)<br>• ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டப் பின் படிப்பு டிப்ளோமா பாடநெறிக்கு (03 புள்ளிகள் வீதம் உச்ச புள்ளிகள் 12)<br>• ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் எந்த வொரு விடயப் பரப்பின் கீழும் பட்டப் பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல் (10 புள்ளிகள்) | 20 | ஏற்புடையதன்று |
| **அனுபவம்**<br>ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் தொழில் அனுபவம் ஒரு வருடத்திற்கு 10 புள்ளிகள் வீதம் உச்சமாக 20 புள்ளிகள் | 20 | |
| வெளிக்கள திறமைகள்<br>விளையாட்டு மற்றும் சமூக செயற்பாடுகள் | 20 | |
| **சுய அறிவு மதிப்பீடு**<br>புலனாய்வு விடயத்துடன் தொடர்புடைய விடய ஆய்வு சார்ந்து தயாரிக்கப்பட்ட சுருக்க எழுத்துமூலப் பரீட்சையொன்றை நடாத்தி அதன் மூலம் விண்ணப்பதாரிகளின் புலனாய்வுத் திறன் மதிப்பீடு செய்யப்படும் (ஆரம்ப ஆட்சேர்ப்பு பரீட்சையில் சித்தியெய்திய விண்ணப்பதாரர்களுக்கிடையில்) | 20 | |
| தொடர்பாடல் திறன் மற்றும் ஆளுமை | 10 | |
| ஏனைய மொழியாற்றல் | 10 | |

5.3 எழுத்துமூலப் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்களிலிருந்து புள்ளிகளின் திறமை ஒழுங்குக்கு ஏற்ப ஆட்சேர்க்க உத்தேசித்துள்ள எண்ணிக்கையின் இரண்டு மடங்கு பரீட்சார்த்திகள் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அங்கு அவர்கள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகள் மற்றும் எழுத்துமூலப் பரீட்சையில் அவர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகள் ஆகிய இரண்டினதும் கூட்டுத்தொகையின் திறமை ஒழுங்கு முறைக்கு அமைய பரீட்சார்த்திகள் ஆட்சேர்க்கப்படுவர்.

06. விண்ணப்பப்படிவத்தை செ.மீ. 22-29 அமைய ஏ 4 அளவிலான காகிதத்தில் 01 தொடக்கம் 07 வரையிலான தகவல்களை முதல் பக்கத்தில் அமையுமாறு விண்ணப்பத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பத்தின் அந்தந்த தலைப்புக்களை தெளிவாக தனது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும்.உரிய மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத, பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்திய விண்ணப்பத்தின் ஒரு பிரதியை தம்வசம் வைத்திருக்க நடவடிக்கை எடுக்கவும். அத்தோடு பூரணப்படுத்திய விண்ணப்பம் பரீட்சை அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவானதா என்பதை விண்ணப்பதாரி சரிபார்த்துக்கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாத சந்தர்ப்பத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை கருத்திற்கொள்க.

6.1 ***பரீட்சார்த்தியின் அடையாளம் :-***

பரீட்சார்த்தியின் அடையாளத்தை உறுதிப்படுத்த பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை நிலைய அதிபருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்:

I. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை;

II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்தி நேர்முகப் பரீட்சை சபையினால் அல்லது வினவப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்:-

I. கல்விச் சான்றிதழ்கள் ;

II. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்;

III. தேசிய ஆள் அடையாள அட்டை;

IV. அனுபவம் பற்றிய சான்றிதழ்;

V. நடத்தை பற்றிய இரண்டு சான்றிதழ்கள் (அதில் ஒன்று பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்டு கிராம அலுவரிடமிருந்து பெறப்படுதல் வேண்டும்).

**<u>கவனத்திற்கொள்க</u>**

(அ) விண்ணப்பிக்கும் பதவியை விண்ணப்பத்தில் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

(ஆ) ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கும் சந்தர்ப்பங்களில் ஏற்புடைய ஆவணங்களை சமர்ப்பிக்க தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படமாட்டாது.

(இ) இந்தப் பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் நாட்டின் எப்பாகத்திலும் கால நேர வரையறையின்றி சேவையில் ஈடுபடுத்தப்படுவர்.

07. **பரீட்சைக் கட்டணம்** - பரீட்சைக் கட்டணம் ரூபா 750/- ஆகும். இந்த தொகையை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 க்கு வரவு வைத்து இலங்கையின் எந்தவொரு தபால் நிலையம் /உப தபால் நிலையத்தில் மாத்திரம் செலுத்துதல் வேண்டும். பணம் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயருக்கு வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் கழன்றுவிடாதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். (பற்றுச் சீட்டின் பிரதியொன்றை வைத்திருப்பது பிரயோசனமானது.) எத்தகைய காரணத்தைக் கொண்டும் இப்பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதோடு பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

08. **பரீட்சைக்குத் தோற்றுதல் :**

8.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற பூர்வாங்க முடிவின் பிரகாரம் அறிவித்தலிலுள்ள வயதெல்லைக்குள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்திய விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்படும். அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்ட உடன் அது தொடர்பான

பத்திரிகை அறிவித்தலொன்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 தினங்களுக்கு பின்னர் தமது அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள படி அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவில் உசாவுதல் வேண்டும். அவ்வாறு உசாவும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியிலுள்ளவரொருவரெனின் அந்தத் தகவல்களுடன் தொலை நகல் மூலம் அனுமதி அட்டையின் பிரதியொன்றை துரிதமாகப் பெற்றுக்கொள்ள விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கம் ஒன்றுடன் கோரிக்கை கடிதமொன்றை அறிவித்தலில் உள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்புவது பயனுள்ளதாகும். அவ்வாறு உசாவும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவும் ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்த தம்வசம் வைத்துக்கொண்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டுப் பிரதி மற்றும் விண்ணப்பத்தை அஞ்சல் செய்த பதிவுத் தபால் சிட்டை என்பவற்றை தயார் நிலையில் வைத்திருப்பது பிரயோசனமளிக்கும்.

விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சை அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். நிறுவனமொன்றிலிருந்து பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரி ஒருவர் தனது கையொப்பத்தை தான் பணியாற்றும் நிறுவனத் தலைவர் மூலம் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பதாரிகள் தனது கையொப்பத்தை அரசாங்க பாசாலையொன்றின் அதிபர்/ ஓய்வூதிய உத்தியோகத்தர்/ தனது பிரிவின் கிராம அலுவலர்/ சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ பிரசித்திபெற்ற நொத்தாரிசு/ முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் ரூபா 415,260/- அல்லது அதற்கு கூடிய வருடாந்த சம்பளத்தைப் பெறுகின்ற அரசாங்க நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரால் அல்லது பௌத்த விகாரையொன்றின் பிரதம பிக்கு அல்லது தலைமைப் பிக்கு அல்லது ஏனைய சமயப் பெரியார் ஒருவர் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். தனக்கு வழங்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அவ்வாறு தோற்றும் ஆரம்ப சந்தர்ப்பத்தில் பரீட்சை நிலைய அதிபருக்கு தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

8.2 எழுத்துமூல மற்றும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்குக்கு அமைய தகைமைப்பெற்ற விண்ணப்பதாரிகளின் பேறுபேற்று அட்டவணை "இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திற்கு" வழங்கப்படும். எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் அஞ்சல் மூலம் அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும்.

8.3 விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படுவது விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது ஏற்புடைய பதவிக்கு தகுதிபெற்றுள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது.

8.4 பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டுள்ளனர். அந்த சட்டதிட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கும் தண்டனைக்கு ஆளாகுதல் வேண்டும்.

09. அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகள், அவ்வப்போது அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்படும் சுற்றுநிருபங்கள், சேவைப் பிரமாணக் குறிப்புகள் மற்றும் அவற்றுக்கு செய்யப்பட்டுள்ள திருத்தங்கள் என்பன இப்பதவிக்கு ஏற்புடையதாகும்.

10. வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது ஒரு பகுதியை நிரப்புதல் பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் பதப்பிரயோகங்களுக்கு மத்தியில் முரண்பாடு எழுமிடத்து சிங்கள மொழி அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

(சனாதிபதி சட்டத்தரணி) சரத் ஜயமான்ன,
பணிப்பாளர் நாயகம்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு,
இல.36, மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07,
2018, மே 31.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் புலனாய்வு உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2018**

## Open Competitive Examination for Recruitment to Post of Investigation Officer of the Commission to Investigate Allegations of Bribery or Corruption – 2018

பரீட்சைக்குத் தோற்றும் நகரம்

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| முதல் தெரிவு | | |
| இரண்டாவது தெரிவு | | |

(அட்டவணை 1 இன் பிரகாரம் பூரணப்படுத்துக)

எழுத்துமூல பரீட்சைக்கு தோற்றும் ஊடக மொழி
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

01. முதலெழுத்துக்கள் இறுதியில் அமையுமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :......................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
(உதா.- NIMAL A.B.C.D.)

02. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் (ஆங்கிலத்தில்) : .......................................................................
..........................................................................................................................................................

03. முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ......................................................................................................
..........................................................................................................................................................

04. (i) நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : (அழைப்புக் கடிதம் இந்த முகவரிக்கு அஞ்சல் செய்யப்படும்)
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

(ii) உத்தியோகபூர்வ முகவரி (அரசாங்க சேவையில் இருப்பவரெனின்) :..........................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

05. தேசிய ஆளடையாள அட்டை இல : | | | | | | | | | | | |

06. பால்நிலை : ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

07. இனம் : ( சிங்களவர் 1, - தமிழர் 2, - இந்தியத் தமிழர் 3, - முஸ்லிம் 4, - வேறு 5)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

08. பிறந்த திகதி :

வருடம்: | | | | | மாதம் : | | | திகதி : | | |

2018.07.10 ஆந் திகதிக்கு வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

09. தொலைபேசி இல. : கையடக்க ☐☐☐☐☐☐☐☐☐☐

நிலையான ☐☐☐☐☐☐☐☐☐☐

10. கல்வித் தகைமைகள் :

க.பொ.த. (சா.தரம்)

| பாடம் | தரம் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |

| பாடம் | தரம் |
|---|---|
| 6 | |
| 7 | |
| 8 | |
| 9 | |
| 10 | |

க.பொ.த. (உயர்.தரம்)

| பாடம் | தரம் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |

11. பட்டப் படிப்பு பாடநெறி : ____________________.

பல்கலைக்கழகம் : ____________________.

பட்டம் தொடர்பான தகவல்கள் : __________.

வேறு தகைமைகள் :

1. __________________.
2. __________________.
3. __________________.

12. அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்ட அல்லது பதவி விலகிய ஒருவரா?: ஆம் / இல்லை :

13. ஏதேனும் குற்றத்திற்கு நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டவரா? ……………………………………………………

பதில் ஆம் எனில் விபரங்களைத் தருக. : ……………………………………………………

……………………………………………………………………………………

14. தாங்கள் தற்போது ஏதேனும் தொழில் புரிபவராயின் அது தொடர்பான தகவல்கள்:

நிறுவனம் :___________.

முதல் நியமனத் திகதி :___________.

பதவி :___________.

சம்பளம் : ___________.

15. தாங்கள் பற்றிய தகவல்களை வழங்க முடியுமான உறவினர்கள் அல்லாத இருவரின் பெயர்கள் மற்றும் முகவரிகளை குறிப்பிடுக :-

(i) __________.

(ii) __________.

16. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் விபரங்கள் :-

i. பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய அலுவலகம்: ................

ii. பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி: ......................

iii. செலுத்திய தொகை : ...........................

| |
|---|
| பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு இங்கே ஒட்டவும்.<br>( பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்திருப்பது பயனுள்ளது.) |

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானதும் உண்மையானதுமென உறுதிப்படுத்துகின்றேன். என்னால் இங்கு வழங்கப்பட்டுள்ள இவ் உறுதியுரை பொய்யானதென நிரூபிக்கப்பட்டால் நியமிக்கப்படுவதற்கு முன் தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமிக்கப்பட்டதன் பின் எந்தவித நஷ்டஈடும் இன்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்படுவேன் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

.........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி : .........................

10. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:-

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் .................................... இல் வசிக்கும் திரு./திருமதி/செல்வி ............................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் 2018.............மாதம் ............... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அந்தப் பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

...............................................................
கையொப்பம்.

பெயர் மற்றும் பதவிப் பெயர் .............................
முகவரி :........................
பதவி முத்திரை:........................
திகதி : ..........................

**குறிப்பு** – தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தமது கையொப்பத்தை ஏற்புடைய திணைக்களத் தலைவர் மூலம் அல்லது அவருக்கு பதிலாக அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

***விண்ணப்பதாரி அரசாங்க உத்தியோகத்தர் எனின்:-***

*திணைக்களத் தலைவரின் சான்றிதழ்: -*

*இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/ செல்வி .................................. தற்போது இந்த அமைச்சில்/ திணைக்களத்தில்/அலுவலகத்தில் நிரந்தர / தற்காலிக பதவியொன்றில் கடமை புரிகின்றார் என்றும் அவரது சுயவிபரக் கோவைக்கு மற்றும் ஏனைய ஆவணங்களுக்கு அமைய அவர் வழங்கியுள்ள தகவல்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதிப்படுத்துகின்றேன். அவர் இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது என்பதையும் அறியத்தருகின்றேன்.*

.........................................
*திணைக்களத் தலைவரின் கையொப்பம்.*

*பெயர்* : ........................
*பதவி* : ......................
*திணைக்களம்* : .........................
*திகதி* : .........................

(தேவையற்ற சொற்களை வெட்டிவிடுக)

**அட்டவணை - 01**

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | *01* |
| கண்டி | *02* |
| மாத்தறை | *03* |
| குருநாகல் | *04* |
| கிளிநொச்சி | *05* |
| திருகோணமலை | *06* |

***6-627***

---

**சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு**

*அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018*

*1.0* *அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை, சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளரினால் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*2.0* *(அ) அட்டவணை இலக்கம் III இல் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளரினால் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சை ஒன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் திறமையின் அடிப்படையில் தகைமை பெற்றுள்ள பரீட்சார்த்திகள், மாவட்ட மக்கள் தொகையின் விகிதாசார அடிப்படையில் அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த பதவிக்கு நியமிக்கும்போது, தகைமைகளைப் பரீட்சிப்பதற்கான நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் தேர்ந்தெடுக்கப்படுவர். இப்பரீட்சையானது சுகாதாரம், போசணை*

மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளரினால் நடாத்தப்படுவதுடன், அவரினால் விதிக்கப்படுகின்ற ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் உட்படுவர். அவரது தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற பரீட்சார்த்திகளுக்கான சட்டங்கள் வர்த்தமானப் பத்திரிகையில் தனியாக குறிப்பிடப்பட்டுள்ளன.

(ஆ) தேர்ந்தெடுக்கப்படுவோர் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்குவரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் வெற்றிடங்கள் ஒரு சிலவற்றை அல்லது வெற்றிடங்கள் அனைத்தையும் நிரப்பாமல் இருப்பதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

3.0 **மொழி மூலம்** :- இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறும். பரீட்சார்த்திகள் தமது விருப்பின் பிரகாரம் இதில் யாதேனுமொரு மொழியில் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்ற முடியும். விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

4.0 **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நிபந்தனைகள் :**

(i) அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்துகின்ற பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் இலக்கம் 2053/18 மற்றும் 2018.01.09 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அச்சேவைப் பிரமாணக் குறிப்பில் இதன் பின்னர் கொண்டுவரப்படுகின்ற திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்கு விதிகளின் ஏற்பாடுகளுக்கும், இலக்கம் 1589/30 மற்றும் 2009.02.20 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கும், கட்டுப்படும் விதத்தில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பரீட்சார்த்திகள் அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

(ii) இந்நியமனமானது 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்து 03 வருடங்களுக்குள் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். அது சேவையில் நிரந்தரமாக்குவதற்கான நிபந்தனையாகும்.

(iii) இப்பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கேற்ப, இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்காக நியமனம் பெறுவதற்கும் உட்படுவர்.

(iv) இந்நியமனம் வழங்கப்படுகின்ற அலுவலகத்தில் ஆகக் குறைந்தது மூன்று (03) வருடங்கள் கட்டாயமாக பணியாற்றுதல் வேண்டும். எவ்வாறாயினும் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படுகின்ற யாதேனுமொரு விசேட காரணத்தின் மீது அக்காலம் முடிவடைவதற்கு முன்னர் யாதேனுமொரு உத்தியோகத்தரை இடமாற்றம் செய்ய வேண்டிய தேவை ஏற்படின் நியமன அதிகாரிக்கு அதற்கான அதிகாரம் உண்டு.

(v) அரசகரும மொழி – அரசகரும மொழியல்லாத மொழியில் சேவைக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் சேவையில் நிரந்தரமாக்குவதற்கு முன்னர் ஒரு அரசகரும மொழியில் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். இரண்டாவது அரசகரும மொழி – நியமனம் செய்யப்பட்டு ஐந்து (05) வருடங்கள் பூர்த்தியாவதற்கு முன்னர் பொது நிருவாகச் சுற்றறிக்கை 01/2014 மற்றும் அதற்கு விளைவாந்தன்மையான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் இரண்டாம் அரசகரும மொழி தொடர்பான தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(vi) அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவை உத்தியோகத்தர்களின் சாதாரண கடமை நேரம் வருடத்தின் அனைத்து நாட்களிலும் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 மணி வரையாகும். எனினும் கடமை தேவையின் நிமித்தம் மற்றும் கடமையின் தன்மைக்கேற்ப மேற்படி நேரத்தில் மாற்றம் ஏற்படலாம். மேலும் இரவு நேரக் கடமையில் ஈடுபட வேண்டியமை கட்டாயமானதுடன், கடமையின் தன்மைக்கேற்ப மேலதிக கடமையில் ஈடுபடுத்துவதற்கும் உத்தரவிடப்படலாம். அவ்வாறே வருடத்தின் முந்நூற்றி அறுபத்தி ஐந்து (365) நாட்களிலும் கடமையாற்றுவதற்கு உட்படுகின்றார்.

(vii) சுகாதார, போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளரினால் நிர்ணயிக்கின்ற கடமைகளை நிறைவேற்றுகின்ற இந்த உத்தியோகத்தர்களினால் ரூ.5000/- பெறுமதியான பிணைத் தொகையொன்றினை வைப்புச் செய்தல் வேண்டும்.

(viii) சேவையின் தேவை நிமித்தம் சுகாதார நிறுவனங்கள் மற்றும் மருத்துவ மனைகளில் பணிபுரியும் அலுவலர்கள் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசாங்க விடுமுறை நாட்களில் பணியாற்றுமாறு உத்தரவிடப்படலாம்.

அதற்குப் பதிலாக மேலதிக நேரக் கொடுப்பனவு அல்லது விடுமுறைக்கால சம்பளம் அல்லது பதில் விடுமுறை என்பவற்றில் ஒன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

**5.0 சம்பளம் :** இலக்கம் 03/2016 மற்றும் 2016.02.25 ஆந் திகதியுடைய பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III, II மற்றும் I ஆம் தரங்களுக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூபா 28,940 – 10 x 300 – 11 x 350 – 10 x 560 – 10 x 660 – ரூபா 47,990 ஆகக் காணப்படுவதுடன், அச்சம்பள அளவுத் திட்டமானது 2020.01.01 ஆந் திகதி முதல் அமுலுக்குவரும். சம்பளக் குறியீட்டு இலக்கம் MN-02- 2016 ஆகக் காணப்படுவதுடன், மேற்படி சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நியமனம் அமுலுக்குவரும் தினத்திலிருந்து சம்பளம் வழங்கப்படும். ரூபா 31,940 சம்பள படிமுறையைத் தாண்டிச் செல்வதற்காக தரம் II இற்கான பதவி உயர்வினையும், ரூபா 35,790 சம்பள படிமுறையைத் தாண்டிச் செல்வதற்காக தரம் I இற்கான பதவி உயர்வினையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும். இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படுகின்ற பிற கொடுப்பனவுகளும் உங்களுக்கு உரித்துடையதாகும்.

6.0 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்கின்ற கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு உட்படுதல் வேண்டும். மேலும் விதவைகள் மற்றும் அநாதைகள் / தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதிய சம்பளத் திட்டத்திற்கு பங்களிப்புச் செலுத்துதல் வேண்டும். இதற்கு அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படுகின்ற முறைக்கேற்ப அதற்கான பங்களிப்புத் தொகையினைச் செலுத்துதல் வேண்டும்.

7.0. **இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்காக விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்:-**

7.1. ***அடிப்படைத் தகைமைகள் :***

(அ) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்கின்ற இறுதித் தினத்தன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குப் பொருத்தமான உடல் மற்றும் உள ரீதியான ஆரோக்கிய நிலையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

***7.2. கல்வித் தகைமைகள் :***

(1) கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி மற்றும் கணிதம் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரு தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(2) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல். பழைய பாடத் திட்டத்தின் கீழ் மூன்று (03) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்.

**கவனிக்க :** சகல விண்ணப்பதாரர்களும் பதவிக்குரிய அனைத்துத் தகைமைகளையும் 2018.04.30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

**8.0 மாவட்ட சனத்தொகை விகிதாசார அடிப்படையில் தேர்ந்தெடுத்தல் :**

(அ) மாவட்ட பெயர் அட்டவணையானது அட்டவணை 1 என குறிப்பிடப்பட்டுள்ளது. வெற்றிடத்திற்காக போட்டியிடுவதற்கு தெரிவு செய்யும் மாவட்டம் மற்றும் அதன் இலக்கத்தை அட்டவணை 1 இன் பிரகாரம் விண்ணப்பப் படிவத்தில் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஆ) சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்தலானது பிரதிநிதித்துவ அடிப்படை ஒன்றின் மீது மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தினதும் சனத்தொகையின் விகிதாசாரத்திற்கேற்ப அந்தந்த மாவட்டங்களுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கையில் உரிய தொகை ஒதுக்கப்படும். யாதேனுமொரு மாவட்டத்தில் நிரப்ப வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு போட்டியிடுவதற்கு அந்த மாவட்டத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் மாத்திரமே தகைமை பெறுவர்.

(i) யாதேனுமொரு மாவட்டத்திற்கு மேலே குறிப்பிட்டவாறு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை அந்த மாவட்டத்திற்காக விண்ணப்பித்து தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களில் இருந்து நிரப்ப முடியாத சந்தர்ப்பங்களில் அந்த வெற்றிடங்களின் எண்ணிக்கையை அண்மித்த அனைத்து மாவட்டங்களுக்கு இடையிலும் அந்த மாவட்டத்தின் சனத்தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப மீண்டும் பகிர்ந்தளிக்கப்படும்.

(ii) நிரப்பப்படவுள்ள மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை சிறியளவாயின், அதன் காரணமாக மாவட்ட சனத்தொகை விகிதாசாரத்தை அடிப்படையாகக் கொள்ள முடியாது போகின்றபோது திறமையின் ஒழுங்கு முறைக்கேற்ப தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

(iii) பரீட்சையில் தேவையான ஆகக் குறைந்த புள்ளிகளைப் பெற்றுக்கொண்டவர்களின் தொகையானது நிலவும் வெற்றிடங்களை விடவும் குறைவாகக் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது மாவட்ட சனத் தொகை விகிதாசார அடிப்படையில் தெரிவுகள் இடம்பெற மாட்டாது.

(இ) மாவட்டத்திற்கு தகுதி பெறுவதற்கு இருக்க வேண்டிய தகைமைகள் - மாவட்டம் ஒன்றின் வெற்றிடங்களுக்காக போட்டியிடுவதற்கு பின்வரும் விடயங்களில் ஒன்றேனும் இருத்தல் வேண்டும்.

(i) விண்ணப்பதாரர் அந்த மாவட்டத்தில் பிறந்த ஒருவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய இறுதித் தினத்திற்கு முந்திய ஐந்து (05) வருடங்களினுள் அவர் அந்த மாவட்டத்தில் மூன்று (03) வருடங்களாவது தொடர்ச்சியாக வசித்து வந்த ஒருவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

(iii) அவர் தொடர்ச்சியாக மூன்று (03) வருடங்கள் அந்த மாவட்டத்தில் தமது இரண்டாம் நிலைக் கல்வியை பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு -**

யாதேனுமொரு விண்ணப்பதாரரின் தந்தை அல்லது தாய் அரச, மாகாண அரச சேவையில் அல்லது அரச கூட்டுத்தாபனம் ஒன்றிலே மாற்ற முடியாத சேவையில் ஒன்றில் பணியாற்றும் பட்சத்தில், அந்த விண்ணப்பதாரிக்கு தமது தாய் அல்லது தந்தை பிறந்த இடத்தை தமது மாவட்டமாக தேர்ந்தெடுப்பதற்கு வாய்ப்பளிக்கப்படும். (அதற்காக விண்ணப்பதாரரினால் தமது பெற்றோரின் பிறந்த இடம் மற்றும் அரசாங்க சேவையில் பணியாற்றுவதனை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்கள் என்பவற்றினை நேர்முகப் பரீட்சையின் போது அல்லது கோரப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சமர்ப்பித்தல் வேண்டும்.)

எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சையின் போது அல்லது கோரப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மேற்படி மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதனை உறுதிப்படுத்துவதற்கான பின்வரும் ஆவணங்களை தேவையானவாறு சமர்ப்பிப்பதற்கு கடமைப்பட்டுள்ளார்.

(i) பிறப்புச் சான்றிதழ்;

(ii) பிரதேச செயலாளரினால் இணைக் கையொப்பம் இடப்பட்ட கிராம அலுவலரின் சான்றிதழ் அல்லது 03 வருடங்களுக்குரிய தொடர்ச்சியான பதிவினை உறுதிப்படுத்துவதற்கான வாக்காளர் இடாப்பு;

(iii) மாணவர் செயலாற்றுகை காட்டி ;

(iv) எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களுக்குரிய வெற்றிடங்களுக்காக போட்டியிடுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. தாம் மிகவும் விருப்பமான மாவட்டம் யாது என்பதனை விண்ணப்பத்தில் குறிப்பிட்டதன் பின்னர் அதனை மாற்ற முடியாது.

**9.0. பரீட்சை நடைமுறை -:**

(அ) இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறும். விண்ணப்பதாரர் ஒருவர் தமக்குரிய ஒரு மொழியைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். பரீட்சைக்குரிய அனைத்து வினாத்தாள்களுக்கும் அம்மொழியிலேயே விடையளித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சையானது இரண்டு வினாத்தாள்களைக் கொண்டுள்ளது.

| | | புள்ளிகள் | காலம் |
|---|---|---|---|
| (i) | மொழித் தேர்ச்சி | 100 | 2 ½ மணித்தியாலங்கள் |
| (ii) | உளச்சார்பு | 100 | 1 மணித்தியாலம் |

***மொழித் தேர்ச்சி :*** இவ்வினாத்தாள் பரீட்சார்த்திகளின் கருத்துத் தெரிவித்தல், கிரகித்தல், எழுத்து வடிவம், மொழி மற்றும் கட்டுரை, கடமை சார்ந்த கடிதம் ஒன்றினை எழுதுதல், எண் வடிவ அட்டவணையை தயாரித்தல், தரப்பட்டுள்ள விடயத்தை சுருக்கி எழுதுதல், தரப்பட்டுள்ள பல சொற்கள் அடங்கிய கருத்தினை தனி வாக்கியத்தில் எழுதுதல், மற்றும் எளிய இலக்கண மொழி நடை பற்றிய அறிவு என்பன தொடர்பான அறிவினை பரீட்சிப்பதற்கான பாட அறிவினை உள்ளடக்கிய வினாக்களைக் கொண்டிருக்கும்.

***உளச்சார்பு:*** இவ்வினாத்தாள் பரீட்சார்த்திகளின் எண் கணித திறமை, தர்க்க ஆற்றல், பொது அறிவு என்பவற்றினை அளவிடும் வகையில் தயாரிக்கப்படுகின்ற அகநிலை வினாக்களைக் கொண்டிருக்கும்.

**குறிப்பு -**

(அ) அலுவலகப் பணிகளுக்குத் தேவையான பரீட்சார்த்திகளின் தகைமைகள் மற்றும் திறமைகள் என்பவற்றினைப் பரீட்சிப்பதற்காக இவ்வினாத்தாள்கள் தயாரிக்கப்படும்.

(ஆ) அனைத்து எழுத்து மூல வினாத்தாள்கள் தொடர்பாகவும் தெளிவற்ற கையெழுத்துக்கள் மற்றும் சொற்களின் எழுத்துப் பிழைகள் என்பன தொடர்பாக புள்ளிகள் குறைக்கப்படும்.

(இ) இப்பரீட்சையானது போட்டிப் பரீட்சை ஒன்றாகக் காணப்படுகின்ற போதிலும், நியமனம் பெறுவதற்கான தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு வினாத்தாளுக்கும் ஒதுக்கியுள்ள புள்ளிகளில் ஒவ்வொரு வினாத்தாளிலும் நூற்றுக்கு நாற்பது (40%) புள்ளிகளையேனும் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அத்துடன் பரீட்சையின் மொத்தப் புள்ளிகளில் 50% இனை பெற்றுக்கொள்ளல் வேண்டும். ஆட்சேர்ப்புச் செய்கின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையினை பூர்த்தி செய்யக்கூடியவாறு பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்கு முறையினைக் கண்டிப்பாகப் பின்பற்றி நியமனங்கள் வழங்கப்படும்.

(ஈ) பரீட்சைப் பெறுபேறுகள் - விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சையின் பெறுபேறுகள் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் www.health.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத் தளத்தின் ஊடாக வெளியிடப்படும்.

**10.0. போலியான தகவல்களுக்கான தண்டனை :**

விண்ணப்பப் படிவத்தை நிரப்பும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இந்தப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் யாதேனுமொரு விண்ணப்பதாரர் தகைமையற்றவர் என தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் பட்சத்தில் அல்லது பரீட்சை முடிவடைந்ததன் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது தகுதியாளர் நிலையினை இரத்துச்செய்ய முடியும். விண்ணப்பதாரர் ஒருவரினால் சமர்ப்பித்த தகவலொன்று எச்சந்தர்ப்பத்திலும் போலியானதென கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் அவரை அரசாங்க சேவையிலிருந்து விலக்குவதற்கு முடியும்.

**11.0. பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணம் ரூ. 800/= ஆகும். இத்தொகையினை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் திரட்டல் கணக்கு இலக்கம் 7041318 இன் கீழ் வைப்புச் செய்யப்படும் வகையில் இலங்கை வங்கிக் கிளைக்கு மாத்திரம் செலுத்துதல் வேண்டும். **பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டினை விண்ணப்பத்தில் ஒட்டி அனுப்புதல் வேண்டும். (பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் பிரதி ஒன்றினை உங்களிடம் வைத்துக்கொள்ளல் வேண்டும்.)** எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது. காசுக் கட்டளை மற்றும் முத்திரை என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**12.0. விண்ணப்பித்தல் மற்றும் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய ஒழுங்கு முறை :**

I. இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் சகல விண்ணப்பதாரர்களும் A4 அளவிலான (செ.மீ. 21×29) கடதாசியைப் பயன்படுத்தி, 01 முதல் 02 வரையிலான பந்திகளை முதல் பக்கத்திலும், இலக்கம் 03 முதல் 06 வரையிலான பந்திகளை இரண்டாம் பக்கத்திலும் ஏனைய பந்திகளை மூன்றாம் பக்கத்திலும் உள்ளடக்கப்படும் வகையில் 03 பக்கங்களில் தயாரித்துக் கொள்ளல் வேண்டும்.

II. அவ்வாறு தயாரித்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தை **பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே பூர்த்தி செய்தல் வேண்டும்**. விண்ணப்பப் படிவத்தை அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் முலையில் **"அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018"** .................. **(விண்ணப்பிக்கும் மாவட்டத்தைக் குறிப்பிடவும்.)** என குறிப்பிட்டு 2018.07.06 ஆந் திகதிக்கு முன்னர் செயலாளர் சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு, "சுவசிறிபாய", இலக்கம் 385, வண. பத்தேகம விமலவன்ஷ தேரர் மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். (தனிப்பட்ட பெயருக்கு அல்லது வேறு எந்தவொரு முகவரிக்கும் அனுப்புதல் கூடாது.) விண்ணப்பப் படிவத்தின் போட்டோ பிரதி ஒன்றினை உங்களிடம் வைத்துக்கொள்ளல் பயனுடையதாக அமையும்.

**கவனிக்க :** I. பரீட்ரசைக்குத் தோற்றுவதற்கு யாதேனுமொரு நகரத்திற்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை போதிய அளவில் இல்லாத போது இரண்டாம் விருப்பம் தெரிவித்த நகரத்திற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன், அந்த இரண்டாம் நகரத்திற்கும் போதிய விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை போதிய அளவில் இல்லாத போது அண்மித்த நகருக்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். பரீட்சை நடாத்துகின்ற நகரம் பற்றிய இறுதித் தீர்மானம் சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப்படும்.

II. தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள முதலெழுத்துக்கள் உடனான பெயருக்கு மாத்திரமே நியமனக் கடிதம் வழங்கப்படுவதனால் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியினைப் பயன்படுத்தி பெயரை சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். நியமனம் வழங்குகின்ற சந்தர்ப்பத்தில் பெயரில் மாற்றம் செய்வதற்கு அல்லது யாதேனுமொரு பகுதியினை சேர்ப்பதற்கு/ அகற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

III. பரீட்சைக்கான விண்ணப்பப் படிவத்தின் விண்ணப்பதாரரின் கையொப்பத்தை இந்த அறிவித்தலின் 13: (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிலையை உடைய ஒருவரின் ஊடாக உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

IV. வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடைய உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி உரிய தினத்தன்று அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் விண்ணப்பப் படிவத்தினை அனுப்பியுள்ள அனைவருக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதிப் பத்திரமொன்று வழங்கப்படல் விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தகைமை பெற்றுள்ளமைக்கான தகைமையாகக் கொள்ளப்படாது. வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பதாரர்களின் தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படுவதுடன், அதன் போது தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லையென தெரியவரும் பட்சத்தில் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**13.0 பரீட்சைக்குத் தோற்றுதல் :**

(அ) விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப் பத்திரம் அனுப்பி வைத்தவுடன் அது பற்றி சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தின் மூலம் அறிவிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 05 நாட்களின் பின்னரும் பரீட்சை அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாவிடின் அது பற்றி சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் பரீட்சைகள் பிரிவிற்கு அறிவித்தல் வேண்டும்.

